செ.வெ.எண்: 684 நாள்: 21.10.2020

**தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலகம், அரசு பொது மருத்துவமனைகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் திடீர் ஆய்வு**

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அரசு பொது மருத்துவமனை முத்தம்மாள் சத்திரம் ஆகிய பகுதிகளில் இன்று(21.10.2020) மாவட்ட ஆட்சித் தலைவர் கோவிந்த ராவ் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு முத்தம்மாள் சத்திரம் பகுதியை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சத்திரத்திற்குட்பட்ட பகுதிகள் மொத்த இடங்களில் செயல்படும் வணிக நிறுவனங்கள் ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டு சத்திரத்துக்கு உட்பட்ட பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க அறிவுறுத்தினார்.

பின்னர் ஒரத்தநாடு அரசு பொது மருத்துவமனையை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வரும் நபர்களிடம் மருத்துவமனையின் சிகிச்சை முறைகளை கேட்டறிந்தார். பின்னர் கொரோனா நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளையும் ஆய்வுசெய்து, கொரோனா நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மருத்துவர் மற்றும் பணியாளர்களிடம் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து ஒரத்தநாடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாடு கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் பொது இ-சேவை மையத்தை பார்வையிட்டு இ-சேவை மையத்துக்கு வருகைபுரிந்த பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, உடனுக்குடன் பொதுமக்களுக்கு இ-சேவை மைய பணியை விரைந்து செய்து கொடுக்குமாறு அறிவுறுத்தினார். பின்னர் பி பிரிவு அலுவலகத்திற்கு சென்ற ஆட்சியர் அவர்கள் பணியில் இருந்த அலுவலர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் குறை தீர்க்கும் கூட்ட மனுக்கள் தொடர்பாக ஆய்வு செய்து உடனுக்குடன் நடவடிக்கை மேற்க்கொள்ளுமாறு உத்தரவிட்டு எக்காரணத்தைக் கொண்டும் மனுக்கள் தாமதப்படுத்தாமல் செய்து கொடுக்குமாறு அறிவுறுத்தினார்.

பின்னர் பொதுமக்கள் கோரும் பட்டா மாறுதல்கள்,இதர வருவாய் துறை சார்ந்த பணிகள் அனைத்தும் விரைந்து செய்து தருமாறு வட்டாட்சியர் மட்டும் வட்டாட்சியா் பணியாளா்களுக்கு அறிவுறுத்தி மாவட்ட ஆட்சித் தலைவர் திரும.கோவிந்த ராவ் இ.ஆ.ப. திடீர் ஆய்வு மேற்கொண்டார்

இவ் ஆய்வின் போது ஒரத்தநாடு வட்டாட்சியர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்-------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.